بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

# தலாக் விவாகரத்து கோரும் உறுதி மொழிப்படிவம்

**(விவகாரத்து செய்ய மனு கொடுக்கும் ஆண்கள் கீழ்க்கண்ட விதிகளை ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டு மனு அளிக்க வேண்டும்)**

**தம்பதிகள் மத்தியில் பிணக்கு ஏற்பட்டால் அப்போதே தலாக் சொல்ல இஸ்லாம் அனுமதிக்கவில்லை.**

1. **மனைவிக்கு அறிவுரை கூறித்திருத்த வேண்டும்.**
2. **அதையடுத்து சில நாட்கள் கணவன் - மனைவி இருவரும் தனித்தனியாக படுக்க வேண்டும்.**
3. **இதன் பின் மனைவியை இலேசாக அடித்து திருத்தலாம்.**

**இதனால் மனைவி இணக்கமாகி விட்டால் அவருக்கு எதிராக வேறு வழிகளை நாடக் கூடாது.**

இந்த விஷயங்கள் யாவும் இறைவன் திருக்குர்ஆனில் கூறும் வழிமுறையாகும்.

பிணக்கு ஏற்படும் என்று (மனைவியர் விஷயத்தில்) நீங்கள் அஞ்சினால் அவர்களுக்கு அறிவுரை கூறுங்கள்! படுக்கைகளில் அவர்களை விலக்குங்கள்! அவர்களை அடியுங்கள்! அவர்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டு விட்டால் அவர்களுக்கு எதிராக வேறு வழியைத் தேடாதீர்கள்! அல்லாஹ் உயர்ந்தவனாகவும், பெரியவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 34)

4. **மேற்கண்ட மூன்று வழிமுறைகளைப் பயன்படுத்தியும் இணக்கம் ஏற்படாவிட்டால் கணவன் குடும்பத்தின் சார்பில் ஒரு நடுவரையும், மனைவியின் குடும்பத்தின் சார்பில் ஒரு நடுவரையும் நியமித்து நல்லிணக்கம் காண முயற்சிக்க வேண்டும்.**

திருக்குர்ஆனின் பின்வரும் வசனம் இவ்வாறே கட்டளையிடுகிறது.

அவ்விருவரிடையே பிளவு ஏற்படும் என்று நீங்கள் அஞ்சினால் அவன் குடும்பத்தின் சார்பில் ஒரு நடுவரையும், அவள் குடும்பத்தின் சார்பில் ஒரு நடுவரையும் அனுப்புங்கள்! அவ்விருவரும் நல்லிணக்கத்தை விரும்பினால் அல்லாஹ் அவ்விருவருக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவான். அல்லாஹ் அறிந்தவனாகவும், நன்றாகவே அறிந்தவனாகவும் இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:35)

## விவாகரத்து என்று முடிவாகி விட்டால்

**மேற்கண்ட வழிமுறைகளை கடைபிடித்த பின்பும் எவ்வித இணக்கமும் ஏற்படாத போது இஸ்லாம் காட்டும் வழிமுறை கணவன் மனைவியை தலாக் கூறுவதாகும்.**

- **இஸ்லாத்தில் மூன்று தலாக் சொல்லும் வாய்ப்பு கணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரே நேரத்தில் மூன்று தலாக்கையும் சொல்ல முடியாது.**
- **தலாக் கோரும் மனுவை ஜமாஅத்தில் அளிப்பதற்கு முன் எஸ்.எம்.எஸ், வாட்ஸப், மின்னஞ்சல், தபால், தந்தி, போன் ஆகியவற்றின் மூலம் தலாக் சொல்லியிருந்தால் அது தலாக் ஆகாது.**
- **ஏனெனில் மனைவியின் முன்னால் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் தான் தலாக் கூற வேண்டும்.**
- **இதற்கு முன் தலாக் விடுவதாக வக்கீல் நோட்டீஸ் அனுப்பினாலும், சாட்சிகள் இல்லாமல் மனைவியிடம் நேரில் சொல்லி இருந்தாலும் அது தலாக் ஆகாது.**
- **முதலில் கணவர் ஒரு தலாக் மட்டுமே சொல்ல வேண்டும்.**
- **இப்படி சொன்னவுடன் கணவன் மனைவியர் பிரிந்து விடக் கூடாது. மாறாக தலாக் உறுதி செய்யப்பட்ட நாளில் இருந்து மனைவிக்கு மூன்று மாதவிடாய் ஏற்பட்டு தூய்மையாகும் வரை கணவன் வீட்டில் தான் மனைவி இருக்க வேண்டும்.**
- **மனைவியைக் கணவன் வெளியேற்றக் கூடாது.**
- **மனைவியும் தாமாக வெளியேறக் கூடாது.**
- **மாதவிடாய்க் காலங்களான சுமார் இந்த மூன்று மாதங்களும் மனைவிக்கான அடிப்படைத் தேவைகள் செய்து கொடுக்கும் பொறுப்பு கணவனுக்கு உண்டு.**

இதுவே இறைவனின் வரம்பு என திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறிவிட்டான்

பகிரங்கமான வெட்கக்கேடான காரியத்தை அப்பெண்கள் செய்தாலே தவிர அவர்களை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றாதீர்கள்! அவர்களும் வெளியேற வேண்டாம். இவை அல்லாஹ்வின் வரம்புகள். அல்லாஹ்வின் வரம்புகளை மீறுபவர் தமக்கே தீங்கிழைத்துக் கொண்டார். (திருக்குர்ஆன் 65:1)

- **மனைவி ஒழுக்கக்கேடான செயலில் ஈடுபட்டதற்காக விவாகரத்து நடந்தால் அந்த உரிமை பெண்களுக்கு இல்லை. அவர்களை உடனே வெளியேற்றலாம்**

இக்கருத்தை அதே வசனத்தில் உள்ள (திருக்குர்ஆன் 65:1) பகிரங்கமான வெட்கக்கேடான காரியத்தை அப்பெண்கள் செய்தாலே தவிர எனும் சொல் உறுதிப்படுத்தி விடுகிறது.

மேலும் முஸ்லிம் 2989 நபிமொழியிலிருந்தும் இக்கருத்தை புரியலாம்.

- **கணவன் வீட்டில் தங்கியிருக்கும் மூன்று மாதவிடாய் காலத்துக்குள் இருவருக்கும் இணக்கம் ஏற்பட்டால் மீண்டும் அவர்கள் சேர்ந்து கொள்ளலாம். இதற்கு எந்தச் சடங்கும் இல்லை.**
- **மனைவி விபச்சாரம் செய்த குற்றச்சாட்டு அல்லாமல் வேறு காரணங்களுக்காக விவாகரத்து செய்யப்பட்டால் மனைவிக்காக இழப்பீடு வழங்கும் கடமை கணவனுக்கு உண்டு.**

அல்லாஹ் இவ்வாறு கட்டளையிடுகிறான்.

அவர்களைத் தீண்டாத நிலையிலோ, அவர்களுக்கென மஹர் தொகையை முடிவு செய்யாத நிலையிலோ விவாகரத்துச் செய்வது உங்களுக்குக் குற்றமில்லை. வசதி உள்ளவர் தமக்குத் தக்கவாறும், ஏழை தமக்குத் தக்கவாறும் சிறந்த முறையில் அவர்களுக்கு வசதிகள் அளியுங்கள்! இது நன்மை செய்வோர் மீது கடமை. திருக்குர்ஆன் 2:236

விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களுக்கு நல்ல முறையில் வசதிகள் அளிக்கப்பட வேண்டும். (இறைவனை) அஞ்சுவோருக்கு இது கடமை. (அல்குர்ஆன் 2:241)

- **இதில் கணவனின் பொருளாதார நிலையை விசாரித்து அறிந்து அதற்கேற்ப ஜமாஅத் அறிவிக்கும் இழப்பீட்டை வழங்க வேண்டும்.**

கணவனின் பொருளாதார நிலைக்கு ஏற்ப இழப்பீடு அமைய வேண்டும் என்பதை மேற்கண்ட வசனத்தின் வசதி உள்ளவர் தமக்குத் தக்கவாறும், ஏழை தமக்குத் தக்கவாறும் சிறந்த முறையில் அவர்களுக்கு வசதிகள் அளியுங்கள்! எனும் வார்த்தையில் இருந்து அறியலாம்.

- **இதன்படி இந்த ஜமாஅத் நியாயமான முறையில் நிர்ணயம் செய்யும் இழப்பீட்டை விவாகரத்து பெற்ற உடன் கொடுக்க வேண்டும்.**
- **பெண் தரப்பினர் அவகாசம் அளிக்க ஒப்புக் கொண்டால் அந்த அவகாசத்துக்குள் வழங்கி விட வேண்டும்.**
- **இழப்பீடு வழங்கிய பின்னர் மூன்று மாதவிடாய் காலத்துக்குள் இருவரும் இணைந்து கொண்டால் தலாக் பத்திரத்தில் திருத்தம் செய்து இருவரும் இணைந்து கொண்டதை உறுதி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மனைவி என்ற முறையில் கணவனில் சொத்தில் வாரிசாவது, பிறக்கும் பிள்ளைகளுக்கு கணவனைப் பொறுப்பாக்குவது ஆகியவற்றுக்கு இடையூறு ஏற்படும்.**
- **விவாகரத்து பத்திரத்தை திருத்தம் செய்யும் போது கணவன் தரப்பில் இருந்து பெற்ற இழப்பீட்டை கணவன் கோரினால் திருப்பிக் கொடுக்க வேண்டும். திருத்தப் பத்திரத்தில் இதையும் பதிவு செய்ய வேண்டும்.**
- **மூன்று மாதவிடாய் காலம் முடியும் வரை இருவரும் இணைந்து கொள்ளாவிட்டால் அதன் பின் மனைவி தன் பொறுப்பில் தங்கும் வசதியையும் வாழ்க்கை வசதியையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தனக்குப் பிடித்த ஒருவனை அவள மணந்து கொள்ளலாம்.**
- **மூன்று தலாக்கையும் கூற வேண்டும் என்பது கட்டாயமல்ல. ஒரு தலாக்குடனே விட்டு விட்டாலும் பூரண விவாகரத்து ஏற்பட்டு விடும்.**
- **மூன்று மாதவிடாய் காலத்துக்குள் சேர்ந்து கொள்ளாமல் இருவரும் பிரிந்து இருந்து பெண் வேறு திருமணம் செய்யாமல் இருந்தால் இருவரும் விரும்பினால் மீண்டும் மஹர் கொடுத்து திருமணம் செய்து வாழலாம். திருமணம் செய்யாமல் வாழ முடியாது. முன்னர் வாங்கிய இழப்பீட்டை பெண் திருப்பிக் கொடுக்கும் அவசியம் இல்லை.**
- **இப்படி திருமணம் செய்து வாழும் போது மீண்டும் பிணக்கு ஏற்பட்டால் முன்னர் சொன்ன அனைத்து விதிகளையும் வரிசைப்படி கடைப்பிடித்த பின்னரும் இணக்கம் ஏற்படாவிட்டால் இரண்டாம் தலாக் சொல்லலாம்.**
- **முதல் தலாக்கின் போது சொன்ன அனைத்து நடைமுறைகளும் இரண்டாம் தலாக்குக்கும் பொருந்தும்.**
- **இதன் பின்னர் இருவரும் இணைந்து கொண்டு வாழலாம். அதில் இருவருக்கும் பிணக்கு ஏற்பட்டால் அதன் பின் சொல்லப்படும் தலாக், இறுதி தலாக்காகும். எனவே தூர நோக்குடன் சிந்தித்து பார்த்து எல்லா முயற்சியும் செய்து பார்த்து இணக்கம் ஏற்படாத போது மூன்றாவது தலாக் கூறலாம். இதன் பின் கணவன் வீட்டில் மூன்று மாதவிடாய் காலம் மனைவி தங்க முடியாது.**
- **இப்படி ஒவ்வொரு தலாக்கின் போதும் இழப்பீடு கொடுக்க வேண்டியது ஆண்களுக்கு கடமையாகும்.**
- **கணவனின் பொருளாதார நிலையறிந்து ஜமாஅத் நிர்ணயிப்பது தான் இழப்பீடாகும்.**

மேற்கண்ட சட்டங்களை வாசித்து அல்லாஹ்வின் கட்டளையை அறிந்து கொண்டேன். அல்லாஹ்வின் சட்டப்படி அளிக்கும் தீர்ப்பை மறுமை வாழ்க்கைக்கு அஞ்சி நான் ஏற்றுக் கொள்கிறேன்.

**கையொப்பம்**